குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மயிலாடுதுறை
முன்னிலை : திருமதி. M.M.J. உம்முல் பரிதா, B.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1,
மயிலாடுதுறை.

2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 11ஆம் நாள்
2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25–ம் நாள் புதன்கிழமை

**C.N.R.No.TNMY0-2004639-2023**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண் 700100/2023**

அரசுக்காக வனச்சரக அலுவலர்,
சீர்காழி.
வன உயிரின குற்ற வழக்கு
எண். 01/2023 ..... குற்றமுறையிடுபவர்

// எதிர் //

ஜெயசீலன், வயது 35/2023
த/பெ. விஜயகுமார்,
அய்யனார் கோவில் தெரு,
எழுமகளூர், குத்தாலம். ...... எதிரி

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 தேதியிட்ட**
**R.O.C. No.814 /2020/ RG/F1 ன் படி வழக்கின் சுருக்கம்**
**மற்றும் Rule 106 Cr.R.P. ன்படி**

**CASE SUMMARY**

| | | | | |
|---|---|---|---|---|
| i) | The period of Remand of the Accused | Date of Remand | Date of Surrender | Released on Bail |
| | | 22.03.2023 | - | 30.03.2023 |
| ii) | Date of filing of the Complaint/Final report in the Court | Filing of complaint | Filing of Final Report | |
| | | 22.03.2023 | 09.08.2023 | |
| iii) | The date of questioning of the Accused U/s.240 of the code of Criminal Procedure 1973 | 02.12.2023 | | |
| iv) | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except petitions u/s.355 of BNSS. | Crlmp No. | Date of filing | Result |
| | | - | - | - |
| | | - | - | - |

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.25 19:17:22 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| v) | Date of examination in-chief and cross-examination of a witness | Name of the witness | Date of Chief | Date of Cross |
| | | PW1 | 22.08.2025 | 24.02.2026 |
| | | PW2 | 06.02.2026 | 06.02.2026 |
| | | PW3 | 06.02.2026 | 06.02.2026 |
| vi) | Date of examination of the Accused U/s.351 (1) (b) of BNSS | 25.02.2026 | | |
| vii) | Details of abscondence of an Accused and his appearance/production, as the case may be; and | Nil | | |
| viii) | Grant of stay by superior court and the results there of | Nil | | |

இவ்வழக்கு 09.08.2023ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 25.02.2026 ஆம் தேதி இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து குற்றமுறையிடுபவர் தரப்பில் மயிலாடுதுறை அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 திருமதி. P. மாலதி அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. நித்தின்பாபு அவர்கள் முன்னிலையாகி இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.

**// தீர்ப்புரை //**

(i) **<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u> :–**

சீர்காழி வனச்சரகம் மயிலாடுதுறை மங்கைநல்லூர் எழுமகளூர் கிராமத்தில் 22.03.2023ம் தேதி காலை 11.00 மணியளவில் எதிரியின் வயலில் இறந்த மூன்று பெண் மயில்கள் கிடந்ததை கண்டுபிடித்து அருகில் இருந்த எதிரியிரிடம் விசாரித்ததில் வயலில் உள்ள பயிர்களை எலிகள் சேதம் ஏற்படுத்துவதால், குருணை பூச்சிக்கொல்லி மருத்து கலந்த அரிசியை வயலில் வைத்துள்ளதாகவும் வயலில் உள்ள பயிர்களை எலிகள் நாசம் செய்வதாகவும், எலிக்காக தன் வயலில் அரசியில் குருணை கலந்து வைத்து மயில்கள் இறந்துபோவதற்கு காரணமாக இருந்த குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது 1972 இந்திய வனஉயிரின பாதுகாப்பு சட்டம் பிரிவு 5, உட்பிரிவு (16) a, 39 (1), (2), (3), 49(a), 50 மற்றும் 51ன் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.25 19:17:33 +0530

2) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டு வழக்கிற்கு அடிப்படையான ஆதாரங்கள் இருப்பதால் இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டது. பின்னர் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் அழைப்பாணையின் பேரில் முன்னிலையானவுடன் அவர்களுக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 207 குவிமுச படி இலவசமாக வழங்கப்பட்டது. படித்து பார்க்க போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டது.

3) பின்னர் எதிரி மீது 1972 இந்திய வனஉயிரின பாதுகாப்பு சட்டம் பிரிவு 5, உட்பிரிவு (16) a, 39 (1), (2), (3), 49(a), 50 மற்றும் 51ன் கீழ் குற்றம் பற்றி வினவியபோதும், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு தமிழில் வனைந்து, படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோதும் எதிரி அவற்றை மறுத்து குற்றவாளி இல்லை என்றும், எதிர்த்து வழக்காட விரும்புவதாகவும் கூறினார். பின்னர் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**(ii) அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

5) சீர்காழி வனச்சரகம் மயிலாடுதுறை மங்கைநல்லூர் எழுமகளூர் கிராமத்தில் 22.03.2023ம் தேதி காலை 11.00 மணியளவில் எதிரியின் வயலில் இறந்த மூன்று பெண் மயில்கள் கிடந்ததை கண்டுபிடித்து அருகில் இருந்த எதிரியிடம் விசாரித்ததில் வயலில் உள்ள பயிர்களை எலிகள் சேதம் ஏற்படுத்துவதால், குருணை பூச்சிக்கொல்லி மருந்து கலந்த அரிசியை வயலில் வைத்துள்ளதாகவும் வயலில் உள்ள பயிர்களை எலிகள் நாசம் செய்வதாகவும், எலிக்காக தன் வயலில் அரிசியில் குருணை கலந்து வைத்து மயில்கள் இறந்துபோவதற்கு காரணமாக இருந்த குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) **அ.சா.4** ஜோசப் டேனியல் வனச்சரக அலுவலர் கடந்த 22.03.2023 ம் ஆண்டு காலை 10.00 மணிக்கு எழுமகளூர் கிராமத்தில் ஜெயசீலன் த/பெ. விஜயகுமார் என்பரது விவசாய நிலத்தில் 3 மயில்கள் இறந்து கிடப்பதாக தகவலின் படி மயிலாடுதுறை பிரிவு வனவர் கதாநாயகன், வனக்காப்பாளர் பாரதிதாசன் மற்றும் வனக்காவலர் கலைவாணன் ஆகியோரை மேற்படி சம்பவ இடத்தினை பார்வையிடவும், என்ன நடந்தது என்பதை தெரிந்து கொள்வதற்காகவும் அறிவுரை வழங்கியதாகவும், மேற்படி வனவர் கதாநாயகன், வனக்காப்பாளர் பாரதிதாசன் மற்றும் வனக்காவலர் கலைவாணன் ஆகிய மூவரும் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது 3 மயில்கள் இறந்து கிடந்ததாகவும், மயிலின் அருகே குருணை மருந்து கலந்த அரிசி இருந்தது, சம்பவ இடத்தில் எதிரியும் நின்று

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.25 19:17:44 +0530

கொண்டிருந்தவரை விசாரணை செய்தபோது வயலில் உளுந்து பயிரிட்டிருப்பதாகவும், எலி தொல்லைக்காக குருணை மருந்து கலந்த அரிசியை வைத்ததாகவும், மேற்படி எங்கள் அலுவலர்களிடம் தெரிவித்துள்ளார் என்றும், சம்பவ இடத்தில் அந்த பகுதியில் எழுமகளூர் கிராம நிர்வாக அலுவலர் அவர்களிடம் இறந்து போன மயில்களையும், குருணையையும் காண்பித்ததாகவும், மேற்படி மயில்களையும், குருணையையும் கைப்பற்றுதல் மகசர் H நமுனா **அ.சா.ஆ.7** வாயிலாக வனக்காப்பாளர் பாரதிதாசன் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் கைப்பற்றியதாகவும், அதன் பிறகு கைப்பற்றப்பட்ட தடயப்பொருட்களையும், எதிரியையும் வனச்சரக அலுவலகத்திற்கு கொண்டு வந்ததாகவும், வனக்காப்பாளர் கொடுத்த தனி அறிக்கையின் அடிப்படையில் எதிரி மீது வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு 16(a), 39(1)(2)(3), 49(a), 50 மற்றும் 51 ன் கீழ் குற்ற தனி அறிக்கை **அ.சா.ஆ.8** வனக்காப்பாளர் பாரதிதாசன் தயார் செய்ததாகவும், மேற்படி எதிரியை தன் முன்னிலையில் வனவர் கதாநாயகன் விசாரணை செய்தபோது அவர் தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் எலிகளை கொல்வதற்காக குருணை கலந்த அரிசியை தன்னுடைய வயலில் வைத்ததாக கூறியதாகவும், அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை வனக்காப்பாளர் பாரதிதாசன் பதிவு செய்து, சாட்சியாகவும் கையெழுத்து செய்ததாகவும், எதிரி செய்த குற்றம் பிணையில் விடமுடியாத குற்றம் என்பதால் அவரை வனவர் கதாநாயகன் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், மேற்படி மயில்களை பிரேத பரிசோதனை செய்வதற்காக இந்நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதத்தினை வனவர் கதாநாயகன் கொடுத்து அனுமதியினை பெற்றதாகவும், மேற்படி மயில்களை பிரேத பரிசோதனை செய்வதற்காக மயிலாடுதுறை கால்நடை மருத்துவரிடம் கொடுத்து அவைகளை பரிசோதனை செய்து மயில்களின் உள்ளுறுப்பு பாகங்களை மட்டும் எடுத்து தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், மேற்படி தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற ஆய்வறிக்கை **அ.சா.ஆ.9** பெற்று, அந்த ஆய்வறிக்கையில் மயில்கள் குருணை கலந்த அரிசியில் இருந்த ஆர்கனோ பாஸ்பரஸ் என்ற நச்சுப்பொருளால் தான் இறந்ததாக கூறப்பட்டிருந்தது என்றும், வனவர் கதாநாயகன், வனக்காப்பாளர் பாரதிதாசன், வனக்காவலர் கலைவாணன் ஆகியோர்களை விசாரணை செய்தேன் என்றும், எதிரி மீது தடய அறிவியில் ஆய்வறிக்கையினை பெற்ற பிறகு A– படிவம் **அ.சா.ஆ.10** தயார் செய்து 30.06.2023ம் தேதியன்று வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு 16(a), 39(1)(2)(3), 49(a), 50 மற்றும் 51ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் 06.02.2026 அன்று முடிக்கப்பட்டது. அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகள் 4 சாட்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.25 19:17:50 +0530

8) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியத்தில், எதிரிக்கு பாதகமாக தோன்றும் சாட்சிய விவரங்களை தொகுத்து எதிரியிடம் பிரிவு 351(1) (ஆ) BNSS–ன் படி வினவியபோது எதிரி பொய் சாட்சியம், பொய் வழக்கு என்றும், தனது தரப்பு சாட்சியம் இல்லை என்று கூறி எதிரி தரப்பு சாட்சியம் 23.03.2026 அன்று முடிக்கப்பட்டது. எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

9) அரசு தரப்பில் 1972 இந்திய வனஉயிரின பாதுகாப்பு சட்டம் பிரிவு 5, உட்பிரிவு (16) a, 39 (1), (2), (3), 49(a), 50 மற்றும் 51ன் கீழ் குற்றச்சாட்டை நிரூபிக்க சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு மற்றும் சான்றாவணங்களை குறியீடு செய்யப்பட்டு மேற்படி வழக்கில் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு அரசு தரப்பால் வாதிடப்பட்டது.

10) மாறாக எதிரி தரப்பில் எதிரிக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் அரசு தரப்பு எதிரியின் மீதுள்ள குற்றத்தை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி இவ்வழக்கிலிருந்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிடப்பட்டது.

**<u>ii) தீர்வுக்குரிய பிரச்சினை</u> :–**

11) இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில் இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் 1வது எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களான 1972 இந்திய வனஉயிரின பாதுகாப்பு சட்டம் பிரிவு 5, உட்பிரிவு (16) a, 39 (1), (2), (3), 49(a), 50 மற்றும் 51ன் கீழ் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>iv தீர்வு</u> :**

12) இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கானது இவ்வழக்கில் சீர்காழி வனச்சரகம் மயிலாடுதுறை மங்கைநல்லூர் எழுமகளுர் கிராமத்தில் 22.03.2023ம் தேதி காலை 11.00 மணியளவில் எதிரியின் வயலில் இறந்த மூன்று பெண் மயில்கள் கிடந்ததை கண்டுபிடித்து அருகில் இருந்த எதிரியிரிடம் விசாரித்ததில் வயலில் உள்ள பயிர்களை எலிகள் சேதம் ஏற்படுத்துவதால், குருணை பூச்சிக்கொல்லி மருத்து கலந்த அரிசியை வயலில் வைத்துள்ளதாகவும் வயலில் உள்ள பயிர்களை எலிகள் நாசம் செய்வதாகவும், எலிக்காக தன் வயலில் அரசியில் குருணை கலந்து வைத்து மயில்கள் இறந்துபோவதற்கு காரணமாக இருந்த குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது 1972 இந்திய வனஉயிரின பாதுகாப்பு சட்டம் பிரிவு 5, உட்பிரிவு (16) a, 39 (1), (2), (3), 49(a), 50 மற்றும் 51ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.25 19:17:56 +0530

13) மேலும் இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள **அ.சா.1** தனது முதல் விசாரணையில், கடந்த 22.03.2023ம் தேதி சுமார் காலை 10.00 மணியளவில் சீர்காழி வனச்சரகம் மயிலாடுதுறை பிரிவு மங்கைநல்லூர் பீட்டிற்கு உட்பட்ட எழுமகளூர் கிராமத்தில் எதிரி ஜெயசீலன் என்பருடைய விவசாய நிலத்தில் 3 பெண் மயில்கள் இறந்த நிலையில் கிடந்தது, இது சம்பந்தமாக மயிலாடுதுறை வனவர் கதாநாயகன் மற்றும் தானும் தன்னுடன் பணிபுரியும் வனக்காவலர் கலைவாணன் ஆகியோர் காலை 11.00 மணியளவில் மேற்படி எதிரி ஜெயசீலன் என்பவருடைய விவசாய நிலத்திற்கு சென்றோம், அங்கு 3 பெண் மயில்களும் இறந்து கிடந்தன என்றும், விவசாய நிலத்தின் பல்வேறு இடங்களில் மருந்து தடவிய அரிசியும், குருணையும் ஆங்காங்கே சுமார் 20 இடங்களில் வைக்கப்பட்டிருந்தன, இது சம்பந்தமாக இந்த நிலம் யாருடையது என்று அந்த ஊர் கிராம நிர்வாக அலுவலரிடம் விசாரணை செய்தபோது அவர் எதிரி ஜெயசீலனின் இடம் தான் என்றும் அவரது வயலில் 3 பெண் மயில்களும் இறந்து கிடந்தது உண்மைதான் என்று சான்று கொடுத்தார், பிறகு எதிரி ஜெயசீலன் என்பவரை தானும், வனவரும் விசாரணை செய்தபோது தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எங்கள் வயலில் உள்ள உழுந்து பயிர்களை எலிகள் சேதப்படுத்தியதால் அவைகளை கொல்வதற்காக விஷம் தடவிய அரிசியை, குருனையையும் வயலில் சுமார் 20 இடங்களில் வைத்ததாக கூறினார், ஜெயசீலன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** வனவர் முன்னிலையில் பதிவு செய்தேன், மேலும், கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் இறந்து கிடந்த 3 பெண் மயில்களையும் விஷம் கலந்த அரிசி மற்றும் குருனையையும் கைப்பற்றுதல் மகசர் வாயிலாக கைப்பற்றினார், பின்னர், H நமுனா தயார் செய்து கைப்பற்றப்பட்ட பொருட்களையும், எதிரியையும் சீர்காழி வன சரகர் அலுவலகத்திற்கு கொண்டு சென்றோம், பிறகு வனசரகர் அலுவலர் எதிரியை மீண்டும் விசாரணை செய்தார், எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பெயரில் வன சரகர் அலுவலர் உத்தரவின் படி தன்னுடைய வன காப்பாளர் புத்தகத்தில் வழக்கு பதிவு செய்தேன், கைது செய்த எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், கைப்பற்றப்பட்ட மயிலையும், அந்த தடய பொருட்களையும் படிவம் 91 **அ.சா.ஆ.2** மற்றும் **அ.சா.ஆ.3**ன் மூலமாக நீதிமன்றம் வசம் ஒப்படைத்ததாகவும், இந்நீதிமன்ற உத்தரவின் படி நக்கம்பாடி, குத்தாலம் கால்நடை உதவி அறுவை சிகிச்சை மருத்துவரிடம் 3 பெண் மயில்களையும் ஒப்படைத்து உடற்கூராய்வு செய்யும்போது உடனிருந்து அந்த மயில்களின் உடல் பாகங்களை மருத்துவரின் அறுவுறுத்தலின் படி சீல் இடப்பட்ட அட்டை பெட்டியினை பெற்று அதனை தஞ்சாவூர் மண்டல தடய அறிவியல் ஆய்வகத்தில் 23.03.2023ம் தேதியன்று சமர்ப்பித்ததாகவும், அந்த ஆய்வகத்திலிருந்து அறிக்கையானது 06.04.2023ம் தேதியன்று கால்நடை மருத்துவருக்கு ஒன்றும், நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி வன சரக அலுவலகத்திற்கு ஒன்றும் வந்ததாகவும், அந்த அறிக்கையில் 3 பெண் மயில்களும் ஆர்கானிக் பாஸ்பரஸ்

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.25 19:18:04 +0530

என்ற பூச்சிக்கொல்லியால் இறந்ததாக அறிக்கை **அ.சா.ஆ.4** அளிக்கப்பட்டதாகவும், அந்த அறிக்கையினை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

14) மேலும் இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள **அ.சா.2** தனது முதல் விசாரணையில், கடந்த 22.03.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு சீர்காழி வனச்சரக அலுவலரும், தானும், வனக்காப்பாளர் பாரதிதாசன், வனக்காவலர் கலைவாணன் மூவரும் எழுமகளூர் கிராமம் நெல் வயலுக்கு சென்று பார்த்தபோது அங்கு 3 பெண் மயில்கள் இறந்து கிடந்ததாகவும், இறந்த மயில்களுக்கு அருகில் குருணை மருந்து கலந்த அரிசியும் இருந்தது என்றும், பக்கத்தில் உள்ளவர்களை விசாரித்ததாகவும், இந்த வயல் எழுமகளூர் கிராமத்தில் வசிக்கும் ஜெயசீலன் வயல் என்று சொன்னதாகவும், ஜெயசீலனை விசாரணை செய்து 3 பெண் மயிலையும், குருணை மருந்து கலந்த அரிசியையும், எடுத்துக்கொண்டு அலுவலகத்தில் வைத்து எதிரியை விசாரணை செய்த போது தானாக முன்வந்து தன் முன்னிலையில் மற்றும் கலைவாணன் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்கமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து **அ.சா.ஆ.5** தன்னுடையது தான், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னுடைய வயலில் எலித்தொல்லை அதிகமாக இருந்ததால் அவைகளை கொல்வதற்காக அரிசியில் குருணை மருந்து கலந்து வைத்ததாக கூறியதாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 3 பெண் மயில்களையும், குருணை மருந்து கலந்த அரிசி 100 கிராம் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் வனக்காப்பாளர் கைப்பற்றுதல் மகசர் H நமுனா வாயிலாக கைப்பற்றியதாகவும், பின்னர் எதிரி ஜெயசீலனை வனக்காப்பாளரும், வனக்காவலரும் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, வனச்சரக அலுவலர் தன்னை விசாரண செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

15) மேலும் இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள **அ.சா.3** தனது முதல் விசாரணையில், 22.03.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு தானும், வனக்காப்பாளர் பாரதிதாசன், பிரிவு வன அலுவலர் கதாநாயகன் ஆகியோர்களுடன் எழுமகளூர் கிராமம் சென்று பார்த்தபோது அங்கு 3 பெண் மயில்கள் இறந்து கிடந்ததாகவும், இறந்த மயில்களுக்கு அருகில் குருணை மருந்து கலந்த அரிசியும் இருந்ததாகவும், பக்கத்தில் உள்ளவர்களை விசாரித்தபோது ஜெயசீலன் வயல் என்று சொன்னதாகவும், ஜெயசீலனை விசாரணை செய்து அவரையும் அழைத்துக்கொண்டு 3 பெண் மயிலையும், குருணை மருந்து கலந்த அரிசியையும் எடுத்துக்கொண்டு அலுவலகத்தில் வைத்து எதிரியை விசாரணை செய்தபோது தானாக முன்வந்து தன் முன்னிலையில் மற்றும் வன அலுவலர் கதாநாயகன் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்கமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து **அ.சா.ஆ.6** தன்னுடையது தான், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னுடைய வயலில் எலித்தொல்லை அதிகமாக இருந்ததால் அவைகளை கொல்வதற்காக அரிசியில் குருணை மருந்து கலந்து வைத்ததாக கூறியதாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 3 பெண்

UMMUL FARITHA Digitally signed by UMMUL FARITHA Date: 2026.03.25 19:18:10 +0530

மயில்களையும், குருணை மருந்து கலந்த அரிசி 100 கிராமையும் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் வனக்காப்பாளர் கைப்பற்றுதல் மகசர் H நமுனா வாயிலாக கைப்பற்றியதாகவும், பின்னர் எதிரி ஜெயசீலனை வனக்காப்பாளரும், வனக்காவலரும் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி வனச்சரக அலுவலர் தன்னை விசாரணை செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

16) மேற்படி அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சாட்சியங்கள் மூலமாக இவ்வழக்கில் இறந்துபோன 3 பெண் மயில்களை கைப்பற்றிய இடமானது எதிரியுடையது என்று அரசு தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது தெரிய வருகிறது. ஆனால், மேற்படி இடத்தின் உரிமையாளர் விஜயகுமார் என்பவர் என்று கிராம நிர்வாக அதிகாரி சான்று வழங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி விஜயகுமார் என்பவர் எதிரியின் தகப்பனார் என்று விசாரணை அதிகாரியான அ.சா.4 தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். அவ்வாறு அவரது தகப்பனாரான விஜயகுமார் இடத்தில் எதிரி சாகுபடி செய்து வந்திருந்தால் அதற்கான சிட்டா அடங்கல் போன்ற அனுபவத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் அரசு தரப்பில் தாக்கல் செய்திருக்கலாம் அவ்வாறு அரசு தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மேலும், இறந்துபோன மயில்களை கிராம நிர்வாக அதிகாரி முன்னிலையில் கைப்பற்றியதாக சொல்லியுள்ள நிலையில் கைப்பற்றுதல் மகசரில் சாட்சியாக கிராம நிர்வாக அதிகாரி கையெழுத்து போடவில்லை அவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவும் இல்லை. மேலும், எதிரியின் நிலத்திலிருந்து இறந்துபோன மயில்களை கைப்பற்றுதல் செய்த இடத்திற்கு அருகிலுள்ள நபர்களை விசாரித்ததாகவும், விசாரிக்கவில்லை என்றும் அ.சா.2 மற்றும் அ.சா.3 முன்னுக்கு பின் முரணாக கூறியுள்ளார்கள்.

17) மேலும், சம்பவ இடத்திற்கு பாலையூர் போலிசார் வந்ததாகவும், அவர்களுடன் எதிரி மற்றும் இறந்துபோன மயில்களுடன் புகைப்படம் எடுத்துள்ளதாகவும் கூறியுள்ள நிலையில் மேற்படி பாலையூர் போலிசார் யார் தகவல் சொல்லி சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றும், வன அலுவலர்கள் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பாகவே பாலையூர் போலிசார் எந்த காரணத்திற்காக வந்தார்கள் என்பதற்கும் அரசு தரப்பில் எவ்வித விளக்கமும் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும், அ.சா.3க்கு யார் புகைப்படம் எடுத்தார்கள் என்றும் தெரியவில்லை என்று சாட்சியமளித்துள்ளார். மேலும், சம்பவ இடத்திலிருந்து இறந்துபோன மயில்களை வன அலுவலர்கள் கைப்பற்றினார்கள் என்பதற்கு கண்ணுற்ற சாட்சி யாரும் சாட்சியமளிக்கவில்லை. அக்கம் பக்கத்தில் இருந்த நபர்களையும் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை. எதிரியிடம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் வயலில் உள்ள உளுந்து பயிர்களை எலிகள் நாசம் செய்வதால் அவற்றை கொல்லுவதற்காக அரிசியில் குருணை கலந்து வைத்தார் என்பதை ஒப்புக்கொண்டதாக அரசு தரப்பில் சாட்சிகள் சாட்சியமளித்துள்ள நிலையில் மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் எதிரியிடமிருந்து பெறும்போது தனிநபர்

UMMUL FARITHA

Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.25 19:18:18 +0530

சாட்சிகள் முன்னிலையில் பெற்றார்கள் என்பதற்கு எவ்வித சாட்சியமும் முன்னிலைப்படுத்தவில்லை.

18) மேலும், கைப்பற்றுதல் மகசர் சீர்காழியிலுள்ள வனசரக அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதாக அ.சா.2 சாட்சியமளித்துள்ள நிலையில் இறந்து போன மயில்களை சம்பவ இடத்தில் கைப்பற்றியதாக கூறியுள்ளதன் மூலம் கைப்பற்றுதல் மகசர் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யவில்லை என்பது தெரிய வருகிறது. மேலும், அ.சா.1 அக்கம் பக்கத்தில் இருந்த நில உரிமையாளர்களிடம் விசாரித்ததில் எலிக்கு மருந்து வைத்ததாக கூறினார்கள் என்று சாட்சியமளித்துள்ளதன் மூலம் மயில்களை கொல்லும் எண்ணத்தில் மருந்து வைக்கப்படவில்லை என்பது புலனாகின்றது.

19) மேலும், குருணை மருந்து கலந்த அரிசியில் ஆர்கானிக் பாஸ்பரஸ் இருப்பதை நிரூபணம் செய்வதற்கு மேற்படி குருணை கலந்த அரிசியை தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி அரிசியில் குருணை மருந்து கலந்து இருந்தது என்பதை நிரூபிக்க கூடிய அறிக்கையும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, இறந்துபோன 3 பெண் மயில்களும் மேற்படி குருணை கலந்த அரிசியை சாப்பிட்டு இறந்துபோனது என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை.

20) மேலும், எதிரியின் நிலத்திலிருந்து குருணை மருந்து கலந்த அரிசியை தனி நபர்கள் சாட்சிகள் முன்னிலையில் வன அலுவலர்கள் கைப்பற்றியதாக சாட்சியம் காணப்படவில்லை. மாறாக கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் கைப்பற்றியதாக கூறியுள்ள நிலையில் கிராம நிர்வாக அலுவலரையும் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை. கைப்பற்றுதல் மகசரில் அவரிடம் சாட்சி கையெழுத்தும் பெறவில்லை.

21) இந்த வழக்கின் விசாரணை அதிகாரியான அ.சா.4 தனது குறுக்கு விசாரணையில், இந்த வழக்கில் தனிநபர் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றால் அந்த இடத்தில் தனிநபர்கள் யாரும் இல்லை என்பதால் விசாரிக்கவில்லை என்று சாட்சியமளித்துவிட்டு சம்பவ இடத்திற்கு சென்று நான் விசாரணை செய்தேனா என்றால் இல்லை என்று முரண்பட்டு சாட்சியமளித்துள்ளதன் மூலம் விசாரணை அதிகாரி அ.சா.4 சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் தனி நபர்கள் யாரும் சம்பவ இடத்தில் இல்லை என்று சாட்சியமளித்துள்ளது பொய்யானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.25 19:18:25 +0530

22) மேலும், எதிரியின் நிலத்தில் குருணை மருந்து கலந்த அரிசியை சாப்பிட்டு மயில்கள் இறந்துபோய்விட்டது என்பது சம்பந்தமாக மணிவண்ணன் என்பவர் எழுத்து மூலமாக புகார் கொடுத்தார் என்று அ.சா.4 தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். ஆனால் மேற்படி மணிவண்ணன் என்பவரை இந்த வழக்கில் சாட்சியாக அரசு தரப்பில் விசாரிக்கப்படவில்லை. அவர் கொடுத்த புகாரையும் இந்நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை.

23) னவே, எதிரி தான் சம்பவ இடத்தில் 3 பெண் மயில்களையும் கொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் அரிசியல் குருணை மருந்து கலந்து வைத்தார் என்ற குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்கும் வகையில் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் நம்பும்படியாகவும், கோர்வையாகவும் அமைந்திருக்கவில்லை என்பது தெளிவாகிறது. எனவே, சம்பவ சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க போதுமானதாக இல்லாத நிலையில், அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுதிநிலை ஐயத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்ற காரணத்தினால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீது 1972 இந்திய வனஉயிரின பாதுகாப்பு சட்டம் பிரிவு 5, உட்பிரிவு (16) a, 39 (1), (2), (3), 49(a), 50 மற்றும் 51ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் எதிரி குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

24) இறுதியாக, எதிரி மீது சட்டப்பிரிவு 1972 இந்திய வனஉயிரின பாதுகாப்பு சட்டம் பிரிவு 5, உட்பிரிவு (16) a, 39 (1), (2), (3), 49(a), 50 மற்றும் 51ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில் எதிரி குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

25) எதிரியால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப்பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

26) அரசு தரப்பால் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25–ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.25 19:18:33 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.

<u>அட்டவணை</u>

<u>1. அரசு தரப்பு சாட்சிகள்</u>

அ.சா.1 – திரு. பாரதிதாசன்

அ.சா.2 – திரு. கதாநாயகன்

அ.சா.3 – திரு. கலைவாணன்

அ.சா.4 – திரு. ஜோசப் டேனியல்

<u>2. அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 22.03.2023 | ஒப்புதல் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 22.03.2023 | H நமுனா |
| அ.சா.ஆ.3 | – | படிவம் 91 |
| அ.சா.ஆ.4 | 24.03.2023 | அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 22.03.2023 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.2ன் முதலாவது கையெழுத்து |
| அ.சா.ஆ.6 | 22.03.2023 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.3ன் இரண்டாவது கையெழுத்து |
| அ.சா.ஆ.7 | 22.03.2023 | தனி அறிக்கை |
| அ.சா.ஆ.8 | 06.04.2023 | தடய அறிவியல் ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.9 | 22.03.2023 | A படிவம் |

<u>அரசு தரப்பு சான்று பொருள் : இல்லை</u>

<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் :</u> இல்லை

<u>குறிப்பு</u>

1. எதிரி விசாரணையின் போது பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு குறித்து காவல் துறைக்கு அறிவிக்கப்பட்டது.
3. சாட்சிகள் விசாரணையின் போது 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.25 19:18:39 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.